# மாதிரி காலண்டுத் தேர்வு 2022
## எட்டாம் வகுப்பு

**நேரம் : 2.30 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள் : 100**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 10×1=10

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ..............................
   அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
2. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ........................
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ. சிதம்பரனார்
   ஈ) பெருஞ்சித்திரனார்
3. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ..............................
   அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ
4. பள்ளிக்குச் சென்று கல்வி ........................ சிறப்பு.
   அ) பயிலுதல் ஆ) பார்த்தல் இ) கேட்டல் ஈ) பாடுதல்
5. 'செத்திறந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................
   அ) செ + திறந்த ஆ) செத்து + திறந்த
   இ) செ + இறந்த ஈ) செத்து + இறந்த
6. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ..................... மதிக்கின்றனர்.
   அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
7. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ........................
   அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர்
   இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
8. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது .......................... நீட்சியாகவே உள்ளது.
   அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்
9. கற்றவருக்கு அழகு தருவது ..............................
   அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி
10. எட்டாம் வேற்றுமை ........................ வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.
    அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) விளி ஈ) பயனிலை

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5×1=5

11. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ........................
12. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ........................
13. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ........................ எனப்படும்.
14. கலப்பில் .............................. உண்டென்பது இயற்கை நுட்பம்
15. புற உலக ஆராய்ச்சிக்கு .................... கொழுகொம்பு போன்றது.

**இ) பொருத்துக** 5×1=5

16. விசும்பு - வானம்
17. காலன் - எமன்
18. தெளிவு - நற்காட்சி

19. வையம் - உலகம்
20. முற்ற - ஒளிர

**ஈ) மனப்பாடப் பகுதியை அடிமாறாமல் எழுதுக.** **4+2=6**

21. வாழ்க நிரந்திரம் எனத் தொடங்கும் பாடலை எழுதுக
22. தக்கார் எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக

**உ) ஓரிரு சொற்களில் விடையளி ( பத்து வினாக்களுக்கு மட்டும் )** **10×2=20**

23. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
24. ஓவிய எழுத்து என்றால் என்ன?
25. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
26. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
27. கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப் பாட்டு கூறுவது யாது?
28. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
29. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
30. சான்றோர்க்கு அழகாவது எது?
31. நீலகேசியில் பிறவித் துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?
32. நம்மை நோய் அணுகாமல் காப்பவை யாவை?
33. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?.
34. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.
35. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?
36. பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது?
37. திரு. வி. க., சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக

**ஊ) ஓரிரு வரிகளில் விடையளி ( மூன்று வினாக்களுக்கு மட்டும் )** **3×5=15**

38. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
39. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
40. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?
41. உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக
42. நோய்கள் பெருகக் காரணம் என்ன?.
43. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவனவற்றை எழுதுக.

**எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **10×1=10**

44. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
    கோழி ........................... (கூவும் / கொக்கரிக்கும்)
    சோறு ......................... (தின்/ உண்)
45. கலைச்சொல் அறிவோம்
    அ) Herbs ஆ) Disease

46. தமிழ் எண்களை எழுதுக.
    அ) உலக ஈர நில நாள் பிப்ரவரி 2.
    ஆ) உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16
47. தொடர்களை மாற்றுக
    நேற்று நம் ஊரில் மழை பெய்தது. (வினாத் தொடராக மாற்றுக)
48. ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களுடன் இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
    அ) தேன் - ஆ) மலர் -
49. பின்வரும் தொடரில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.
    திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது
50. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.
    அ) நடக்கிறது – ஆ) வருக –
51. பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக.
    அ) கல், ஆ) பூ,
52. ஒருசொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.
    திங்கள்
53. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.
    வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து.

**ஏ) கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக** **5**




54. வினாக்கள்
    i. எந்த நாளை முன்னிட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது?
    ii. புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
    iii. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகிறது?
    iv. புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு?
    v. புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது?

**ஐ) கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி** **2×8=16**

55. அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக. **(அல்லது)**
    ஆ) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

56. அ) வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக. **(அல்லது)**
ஆ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.

**ஓ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை / கடிதம் எழுதுக. 8**

57. அ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
முன்னுரை – நோய் வரக் காரணங்கள் – நோய் தீர்க்கும் வழிமுறைகள் – வருமுன் காத்தல் – உணவும் மருந்தும் – உடற்பயிற்சியின் தேவை – முடிவுரை **(அல்லது)**
ஆ) கடிதம் எழுதுக
விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

**ந.தாண்டவமூர்த்தி MA.,B.Ed.,**

Padasalai.Net